**இனிமையான குழந்தைகளே! உள்நோக்கு முகமுடையவர்களாகி படிப்பிலேயே முழ்கி இருங்கள். ஸ்ரீமத்படி சதா நடந்து கொண்டே இருந்தால் உங்களது அதிஷ்டம் மிகவும் உயர்ந்ததாகி விடும். இது தனது அதிஷ்டத்தை உயர்வாக்கும் நேரமாகும்.**

கேள்வி: குழந்தைகளாகிய உங்களது உயர்ந்த அதிர்ஷ்டம் எது? அதன் ஆதாரத்தில் நீங்கள் முழு உலகின் அதிர்ஷ்டத்தையும் அறிந்து கொள்கின்றீர்கள்?

பதில்: சுயதரிசன சக்கரதாரியாக ஆவது என்பது அனைத்தையும் விட உயர்ந்ததிலும் உயர்ந்த அதிர்ஷ்டமாகும். பிராமணர்களாகிய நீங்கள் இப்பொழுது சுயதரிசன சக்கரதாரிகளாக ஆகியிருக் கின்றீர்கள். நீங்கள் உங்களது அதிர்ஷ்டத்தையும் அறிந்திருக்கின்றீர்கள், மேலும் முழு உலகின் அதிர்ஷ்டத்தையும் அறிந்திருக் கின்றீர்கள். குழந்தைகளாகிய உங்களின் அதிர்ஷ்டத்தை வைரம் போன்று ஆக்குவதற்காக பாபா வந்திருக்கின்றார். சுயம் பகவான் எனது அதிர்ஷ்டத்தை உருவாக்குவதற்காக கற்பித்துக் கொண்டிருக்கின்றார், அதிர்ஷ்டம் உருவாகிக் கொண்டே இருக்கும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

பாடல்: வரக்கூடிய எதிர்காலத்திற்கு நீங்கள் ........ ஓம் சாந்தி.

குழந்தைகள் பாட்டின் இரண்டு வார்த்தைகளைக் கேட்டீர்கள். கேட்டவுடனேயே தனது அதிர்ஷ்டத்தின் நஷா அதிகரித்து விட வேண்டும். இது அழிவற்ற போதையாகும், இறங்கி விடக் கூடாது. செல்வந்தனாக இருக்கும் மனிதனுக்கு நான் மிகப் பெரிய செல்வந்தன் என்ற போதை இரவு, பகல் இருக்கும். செல்வத்தின் போதை அதிகரிக்கவே செய்கின்றது. ஆக தந்தை அதிர்ஷ்டத்தை உருவாக்கக் கூடியவராக இருக்கின்றார். இப்பொழுது அதிர்ஷ்டமானது துண்டிக்கப்பட்டிருக்கின்றது. சோழிக்குச் சமமான அதிர்ஷ்டமாக இருக்கின்றதா? அல்லது வைரத்திற்குச் சமமான அதிர்ஷ்டமாக இருக்கின்றதா? என்பதை நீங்களே தீர்மானம் செய்து கொள்ள முடியும். எல்லையற்ற தந்தை எதிரில் அமர்ந்து அதிர்ஷ்டத்தை உருவாக்குகின்றார். அதனை நீங்கள் பார்க் கின்றீர்கள், அறிந்திருக்கின்றீர்கள். பரம்பிதா பரமாத்மாவை பார்க்கின்றீர் களா? அல்லது அறிந்திருக்கின்றீர்களா? நாம் ஆத்மாக்கள் என்பதை குழந்தைகள் அறிந்திருக் கின்றீர்கள். ஆத்மாவைப் பார்ப்பதில்லை, ஆனால் நாம் ஆத்மாக்கள், நட்சத்திரத்தைப் போன்று இருக்கின்றோம் என்பதை அறிந்திருக்கின்றீர்கள். பிருகுட்டியின் நடுவில் இருக்கின்றோம். இந்த நேரத்தில் குழந்தைகளாகிய நீங்கள் ஆத்மா அபிமானிகளாக ஆக வேண்டும். இந்த தேகத்தில் இருக்கக் கூடிய ஆத்மாவை தேஹி என்று கூறப்படுகின்றது. என்னை பரம்பிதா பரமாத்மா வந்து சந்திக்கின்றார் என்ற அபிமானம் ஆத்மாவிற்கு இருக்கின்றது. குழந்தைகள் தந்தை யிடத்தில் பிறப்பு எடுக்கின்றார் களெனில் வாரிசாக ஆகின்றார்கள். பிறகு சிலர் ஒரு பைசாவிற்கும் உதவாத அதிர்ஷ்டத்தை உருவாக்கிக் கொள்கின்றனர், சிலர் எதுவும் அடைவதே இல்லை. பிறப்பு மட்டுமே எடுக்கின்றனர். சிலருக்கு 5-6 குழந்தைகள் இருப்பர். வேலை குறைவாக கிடைத்தால் எனக்கு அதிர்ஷ்டத்தில் இவ்வாறு இருக்கின்றது என்று நினைக் கின்றனர். மற்றவர்களின் அதிர்ஷ்டத்தில் மாட மாளிகைகள், கிரீடம், சிம்மாசனம் கிடைப்பதைப்

பார்க்கின்றனர். மனிதர்களின் அதிர்ஷ்டத்தில் வகைகள் இருக்கின்றதல்லவா! ஆக இப்பொழுது நாம் எந்த அதிர்ஷ்டத்திற்காக முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம் என்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். செல்வத்திற்காகவா? அல்லது சுகத்திற்காகவா? மனிதர்கள் முயற்சி செய்து கொண்டே இருக்கின்றனர். செல்வந்த மனிதர்கள் நோய்வாய் பட்டால் நல்ல நல்ல மருத்துவர்கள் சிகிச்சை செய்கின்றனர். செல்வத்தினால் நல்ல சிகிச்சை கிடைக்கும் என்று நினைக்கின்றனர். ஆக செல்வத்திற்கான விசயமல்லவா! நீங்கள் ஸ்ரீமத் மூலமாக மிகவும் உயர்ந்த அதிர்ஷ்டத்தை உருவாக்குகின்றீர்கள். பாபா உயர்ந்ததிலும் உயர்ந்த அதிர்ஷ்டத்தை உருவாக்குகின்றார், ஏனெனில் அவர் உயர்ந்ததிலும் உயாந்தவர் என்பதை குழந்தைகள் அறிந்திருக்கின்றீர்கள். இப்பொழுது நீங்கள் அவரது எதிரில் அமர்ந்திருக்கின்றீர்கள் அல்லவா! தாய், தந்தையின் வீட்டில் அமர்ந்திருக்கின்றீர்கள். யாராவது ராஜா, ராணியாக இருக்கின்றார்கள் எனில், நாம் அப்படிப்பட்ட செயல்கள் செய்ததால் தான் இராஜ்யத்திற்கான அதிஷ்டம் கிடைத் திருப்பதாக நினைக்கின்றனர். இப்பொழுது நாம் எந்த லெட்சுமி, நாராயணனின் சித்திரத்தை பார்க்கின்றோமோ அவர்களும் முந்தைய பிறப்பில் அதிர்ஷ்டத்தை உருவாக்கியிருக்கின்றனர். உங்களுக்கு இந்த புத்தி கிடைத்திருக் கின்றது. மனிதர்களின் புத்தியில் இது வருவதில்லை. அதிகமான செல்வந்தர்கள் இருக்கின்றார்களெனில், இவர்களுக்கு இந்த அதிர்ஷ்டம் எவ்வாறு கிடைத்தது? முந்தைய பிறப்பில் அப்படிப்பட்ட செயல்களைச் செய்ததால் தான் இந்த அளவிற்கு செல்வந்தர்களாக ஆகியிருக்கின்றனர் என்று கூறுவர். கர்மங்களின் பலன் இருக்கின்றதல்லவா! கர்மங்களின் தத்துவம் தனிப்பட்டது என்றும் பாடுகின்றனர். மனிதர்கள் முந்தைய கர்மங்களின் அனுசாரமாகவே அனுபவிக்கின்றனர். இப்பொழுது நீங்கள் உயர்ந்ததிலும் உயர்ந்த லெட்சுமி, நாராயணனின் அதிர்ஷ்டத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றீர்கள். அவர்கள் சத்யுகத்திற்கு எஜமானர் களாக ஆகக் கூடிய செயல்களைக் கற்றுக் கொடுத்தது யார்? நீங்கள் முழு சக்கரத்தையும் அறிந்து கொண்டீர்கள்.

பிராமணர்களாகிய நீங்கள் இப்பொழுது சுயதரிசன சக்கரதாரிகளாக ஆகியிருக்கின்றீர்கள். மற்ற பிராமணர்கள் சுயதரிசன சக்கரதாரிகளாக ஆவதில்லை. அவர்களும் பிராமணர்கள், நீங்களும் பிராமணர்களாக இருக்கின்றீர்கள். ஆனால் உண்மையான பிராமணர்கள் நாம் தான் என்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். பிரம்மாவின் வாய்வழி (ஞானம் கேட்டு) வம்சத்தினர்களாக இருக்கின்றோம். கண்டிப்பாக பிரம்மாவும் யாருடைய குழந்தையாகவோ இருக்க வேண்டும். அவர் சிவபாபாவின் குழந்தையாக இருக்கின்றார். சிவபாபா படைக்கக் கூடியவராக இருக்கின்றார். அவருக்கு தந்தை யாரும் கிடையாது. ஆக இப்பொழுது உங்களது அதிஷ்டத்தை பரம்பிதா பரமாத்மா உருவாக்குகின்றார். தந்தையின் மூலமாகவே அதிஷ்டம் உருவாகின்றது. மாமா, சித்தப்பா, பெரியப்பா போன்றவர்களின் மூலம் உருவாகாது. ஆம், சிலருக்கு ஏற்பட முடியும். அவர்கள் தத்தெடுத்தால் முடியும். நாடகப்படி, முந்தைய கல்பத்தைப் போன்று குழந்தைகளாகிய உங்களையும் தத்தெடுத்திருக்கின்றார். அவரை விட உயர்ந்தவர்கள் வேறு யாரும் கிடையாது. பிரஜாபிதா பிரம்மாவிற்கு அதிகமான குழந்தைகள் உள்ளனர். அவர்களுக்கு தந்தையிடமிருந்து என்ன ஆஸ்தி கிடைத்திருக்கும்! அனைத்து ஆத்மாக்களுக்கும் தந்தையாக சிவபாபா இருக்கின்றார், அனைத்து

ஜீவாத்மாக்களுக்கும் தந்தையாக பிரம்மா இருக்கின்றார் என்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். நீங்கள் இதில் சகோதர, சகோதரிகளாக ஆகின்றீர்கள். குழந்தைகளாகிய உங்களுக்கு தந்தை கூறுகின்றார் - பாருங்கள்! உங்களது அதிர்ஷ்டம் எவ்வளவு உயர்ந்ததாக ஆகின்றது! நான் உங்களுக்கு கற்பித்து எவ்வளவு அதிர்ஷ்டசாலிகளாக ஆக்குகின்றேன்! சத்யுகத்தின் ஆரம்பத்தில் ஸ்ரீ லெட்சுமி, ஸ்ரீ நாராயணன் அல்லது இந்த சொர்க்கவாசிகளின் இராஜ்யம் இருந்தது. அவர்களின் அதிர்ஷ்டம் எவ்வளவு உயர்வானதாக இருந்தது! சிவபாபா அவர்களின் அதிர்ஷ்டத்தை அந்த அளவிற்கு உயர்வானதாக ஆக்கியிருக் கின்றார் என்ற ரகசியம் குழந்தைகளாகிய உங்களின் புத்தியில் இருக்கின்றது. அவர்கள் அதிர்ஷ்டத்தை அனுபவித்து 84 பிறப்புகளை முடித்திருக்கின்றனர். இப்பொழுது மீண்டும் அதே அதிர்ஷ்டத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றனர். இந்த ஞானம் இப்பொழுது உங்கள் புத்தியில் இருக்கின்றது. ஞானக்கடலான சிவபாபாவைத் தவிர வேறு யாரும் புரிய வைக்க முடியாது. அப்படிப்பட்ட தந்தை எவ்வளவு அன்பானவராக இருக்கின்றார்! நீங்களும் அன்பான குழந்தைகளாக இருக்கின்றீர்கள் என்று தந்தை கூறுகின்றார். நிரந்தரமாக என்னை நினைவு செய்யும் பயிற்சி செய்தால் உங்களது விகர்மம் விநாசம் ஆகிவிடும் என்று நான் உங்களுக்கு கட்டளை இடுகின்றேன். சிவபாபா இப்பொழுது இந்த பிரம்மாவின் உடலில் எதிரில் இருக் கின்றார் என்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். நான் சதா நிராகாரமானவனாகஇருக்கின்றேன் என்று தந்தை சதா புரிய வைக்கின்றார். எனது பெயர் சிவா. நான் சாகாரத்தில் வந்து மறுபிறப்பு எடுப்பது கிடையாது. இப்பொழுது நான் வந்திருக்கின்றேன். யார் உரையாடிக் கொண்டிருக் கின்றார்? என்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். உங்களது புத்தி மேலே சென்று விடுகின்றது. அந்த நிராகார பரம்பிதா பரமாத்மா ஞானக் கடலாக இருக்கின்றார். அவரே அதிர்ஷ்டத்தை ஏற்படுத்தக் கூடியவராக இருக்கின்றார். சொர்க்கத்தை ஸ்தாபனை செய்யக் கூடியவரெனில் சொர்க்கத்தை ஸ்தாபனை செய்வாரல்லவா! தந்தை எவ்வாறு பிரம்மாவின் உடலில் எதிரில் உரையாடிக் கொண்டிருக்கின்றார் என்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். செல்லமான குழந்தைகளே! இப்பொழுது நாடகம் முடிவடைகின்றது என்று கூறுகின்றார். ஆத்மா கேட்கின்றது. இது யதார்த்தமான விசயம் என்று ஆத்மாவிற்குத் தெரியும். எவ்வளவு முடியுமோ என்னை நினைவு செய்யுங்கள் என்று தந்தை கூறுகின்றார், மேலும் முழு உலக சக்கரத்தின் ஞானம் உங்களுக்கு மட்டுமே கொடுத்திருக்கின்றேன். சிலருக்கு நல்ல முறையில் தாரணை ஏற்படு கின்றது, சிலர் மறந்து விடுகின்றனர். இப்பொழுது நீங்கள் அமர்ந்திருக் கின்றீர்கள். உங்களுக்கு இந்த ஞான அமிர்தம் கொடுத்துக் கொண்டிருக்கின்றேன். அதாவது ஞானத்தை கற்பித்துக் கொண்டிருக்கின்றேன். சிவபாபா எதிரில் அமர்ந்திருக்கின்றார். அவர் பிறப்பு, இறப்பில் வராதவர். உங்களுக்கு ஒவ்வொரு பிறப்பிலும் பெயர், உருவம், தேசம், காலம் மாறிவிடுகின்றது. தோற்றங்கள் எப்பொழுதும் தனிப்பட்ட தாகவே கிடைக்கின்றது. இது எவ்வளவு ஆழமான, சூட்சும விசயமாகும். உங்களது ஆத்மா அடிக்கடி ஒரு சரீரத்தை விட்டு விட்டு மற்றொன்றை எடுத்துக் கொள்கின்றது. இந்த நேரத்தில் உங்களுக்கு இருக்கக் கூடிய உருவம் போன்று அடுத்த பிறப்பில் இருக்காது. ஒன்று போன்று மற்றொன்று இருக்காது. ஆத்மா ஒரு சரீரத்தை விட்டு மற்றொன்றை எடுக்கும் பொழுது அதன் நடத்தைகள், எண்ணங் கள் போன்ற அனைத்தும் மாறி விடுகின்றன. ஆத்மா விதவிதமான நடிப்புகளை நடிக்க வேண்டியிருக்கின்றது.

வித விதமான பெயர், உருவம், தேசம், காலம், நடத்தைகளினால் நடிப்பு நடிக்க வேண்டியிருக்கின்றது. சில நேரங்களில் ராஜாவாகவும், சில நேரங்களில் ஏழையாகவும் மாறிக் கொண்டே இருக்கின்றது. ஆனால் சில நேரங்களில் நாயாக, பூனையாகவும் நடத்தைகள் இருக்கும் என்பது கிடையாது. இப்பொழுது நாம் எதிர்காலத்தில் இளவரசர், இளவரசி ஆவதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம் என்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். மனிதனிலிருந்து தேவதைகளாக ஆகிக் கொண்டிருக்கின்றோம். இந்த மம்மா, பாபாவும் முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர். பிறகு எதிர்காலத்தில் சென்று லெட்சுமி, நாராயணனாக ஆவார்கள். நாமும் எந்த அளவிற்கு தங்களது அதிர்ஷ்டத்தை உருவாக்கும் முயற்சி செய் கின்றோமோ அந்த அளவிற்கு சுகத்தை அடைவோம். மிகவும் உயர்ந்த வருமானமாகும். அவர்கள் அல்ப கால சுகத்திற்காக இந்த பிறப்பிலேயே வக்கீல் போன்ற நிலையை அடைவார்கள். அடுத்த பிறப்பிற்கான விசயமே கிடையாது. அடுத்த பிறப்பில் ஆகலாம், ஆகாமலும் இருக்கலாம். ஆனால் நாம் எதிர்காலத்தில் சொர்க்கத்திற்கு கண்டிப்பாகச் செல்வோம் என்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். பிறகு அங்கு தேவி, தேவதைகள் என்று கூறப்படுகின்றோம். தந்தையிடமிருந்து நாம் சொர்க்கத்தின் மயில் சிம்மாசனத்திற்கான ஆஸ்தியை அடைந்தே விடுவோம் என்பதை மறந்து விடாதீர்கள். உயர்ந்ததிலும் உயர்ந்தவர் களாக ஆகியே காண்பிப்போம். இறை தந்தை படிப்பிக்கின்றார் என்பதும் புத்தியில் வருகின்ற தல்லவா! நாம் நல்ல முறையில் படித்து 21 பிறவிகளுக்கு தனது பிராப்தியை உருவாக்கிக் கொள்கின்றோம். இந்த நேரத்தில் எந்த அளவிற்கு முயற்சி செய்கின்றோமோ அந்த அளவிற்கு உயர்ந்த அதிர்ஷ்டத்தை உருவாக்குகின்றீர்கள். அந்த அதிர்ஷ்டம் கல்ப கல்பத்திற்கும் நிலைத்திருக்கும். ஆகையால் இந்த நேரத்தில் அதிர்ஷ்டத்திற்காக நல்ல முறையில் முயற்சி செய்ய வேண்டும். மிகவும் உயர்ந்த அதிர்ஷ்டமாகும். அதிகமான சுகம் இருக்கின்றது. இங்கு சிலரிடம் கோடி இருக்கலாம். ஆனால் துளியும் சுகம் கிடையாது. அங்கு முற்றிலுமாக அமைதி, ஓய்வுடன் பிராப்தியை அனுபவிப் பீர்கள். இங்கு எவ்வளவு ஆபத்துக்கள் வந்து கொண்டே இருக்கின்றன. சிறிது நேரத்தில் அதிகமான திவால் ஏற்படும். இறந்து விடுவார்கள். இன்சூர் செய்கின்றனர், ஆனாலும் இன்சூரன்ஸ் கம்பெனியும் என்ன செய்ய முடியும்? ஹிரோசிமாவின் நிலை என்ன ஆனது? எத்தனை மனிதர்கள் இறந்தனர்? இன்சூரன்ஸ் கம்பெனியும் திவால் ஆகி விட்டது. இங்கும் அவ்வாறே ஏற்படும். அனைத்தும் அழிந்து விடும். இன்சூரன்ஸ் காரர்கள் யாருக்கு பணம் கொடுப்பார்கள்? யார் யாருக்கு தீபத்தை ஏற்றுவார்கள்?

மனிதர்களிடத்தில் குருட்டு நம்பிக்கை எவ்வளவு இருக்கின்றது! பெரிய மனிதர்கள் பகட்டு செய்கின்றனர். ரிஷி, முனிவர்களை தங்களை விட உயர்ந்தவர்கள் என்று நினைக்கின்றனர். தர்மத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களாக இருந்தாலும் சந்நியாசிகளுக்கு கண்டிப்பாக வணக்கம் செய்கின்றனர். சாதுக்களிடத்தில் சென்று சாஷ்ட்டாங்கமாக நமஸ்கார் செய்கின்றனர். ஆனால் அவர்களிடத்தில் சாதுக்கள் அம்மாதிரி செய்வதில்லை. ஏனெனில் நான் உயர்ந்தவன், தூய்மையானவன் என்று நினைக்கின்றனர். இந்த தந்தை கூறுகின்றார் - எனது செல்லமான குழந்தைகளே! நான் குழந்தைகளுக்கு நமஸ்காரம் செய்கின்றேன். நீங்கள் எனது தலையின் மேல் இருக்கும் மயில் இறகுகளாக இருக்கின்றீர்கள். நீங்கள் உலகிற்கு எஜமானர்களாக ஆவீர்கள்.

பிரம்மாண்டத்திற்கும் நீங்கள் தான் எஜமானர்களாக இருக்கின்றீர்கள். நீங்கள் இரட்டை எஜமானர்களாக இருக்கின்றீர்கள். நான் ஒன்றிற்கு மட்டும் அதாவது பிரம்மாண்டத் திற்கு மட்டும் எஜமானனாக இருக்கின்றேன். இப்படிப்பட்ட விசயங்களை தந்தையைத் தவிர வேறு யாரும் புரிய வைக்க முடியாது. ஆக யாரிடமிருந்து அப்படிப்பட்ட ஆஸ்தி கிடைக்கின்றதோ அப்படிப்பட்ட தந்தையை எந்த அளவிற்கு நினைவு செய்ய வேண்டும்! தந்தை கூறுகின்றார் - பாருங்கள், இங்கிருந்து எத்தனையோ குழந்தைகள் செல்கின்றனர், பிறகு 6 மாதத்திற்கு தந்தைக்கு கடிதம் எழுதுவதேயில்லை. உயிர் கொடுக்கக் கூடிய, உயிரினும் மேலான, அன்பான தந்தைக்கு கடிதம் எழுதுவதில்லை. கணவன், மனைவி கடிதம் எழுதிக் கொள்ளும் பொழுது பிரானேஷ்வர் என்று கூறுகின்றனர். உண்மையில் அவர் பிரானேஷ்வர் கிடையாது. பிரானேஷ்வரர் ஆக ஒரு தந்தை தான் இருக்கின்றார். அனைத்து ஆத்மாக்களுக்கும் தந்தையானவர் ஒரே ஒருவரே! பிரானேஷ்வர் குழந்தைகளே அதாவது ஆத்மாவை பாதுகாக்கும் ஈஸ்வரிய குழந்தைகளே என்று அவர் கூறுகின்றார். பிரானேஷ்வர் பாபா, நமது உயிரைப் பாதுகாக்கும் தந்தையே என்று குழந்தைகளும் கூறுகின்றனர். இங்கிருந்து தான் இந்த பெயர் வெளிப்பட்டிருக்க வேண்டும். பாரதத்தில் தான் இப்படிப்பட்ட பிரானேஷ்வர், பிரானேஷ்வரி என்று எழுதுகின்றனர். ஆனால் அவ்வாறு கிடையாது. உயிர் தானம் செய்யக் கூடியவர் ஒரே ஒரு தந்தை மட்டுமே. நீங்கள் என்னுடையவர்களாக ஆகின்றீர்களெனில் பிறகு உங்களுக்கு யாரும் துக்கம் கொடுக்க முடியாது. ஆத்மா தான் துக்கம் அடைகின்றது. தந்தை எவ்வளவு அன்பாக புரிய வைக்கின்றார் என்று ஆத்மா தான் உணருகின்றது. அவரையே நினைவும் செய்கின்றது, மகிமையும் செய்கின்றது. மம்மாவையும் அதிகமாக நினைவு செய் கின்றது. யார் அதிகமானவர்களுக்கு நல்ல சேவை செய்கின்றார்களோ அவர்களுக்கு உயர்ந்த பதவி கிடைக்கின்றது. அவர்களுக்குப் பிறகு இரண்டாம் நம்பரில் சேவையில் பாபாவை பின்பற்றக் கூடியவர்கள். நீங்கள் மிகவும் கருணையுள்ளம் உடையவர்களாக ஆக வேண்டும். பாபா நம்மை ஆக்கியதைப் போன்று நாமும் மற்றவர்களை ஆக்க வேண்டும். சொர்க்கத்தின் சொத்து என்பது எவ்வளவு உயர்ந்த பலனாக இருக்கின்றது! தங்கம், வைரங்களால் ஆன மாளிகையில் நாம் உருவாக்குமளவிற்கு செல்வந்தர்களாக இருப்போம். மாயா மச்சன்தரின் விளையாட்டையும் காண்பிக்கின்றனர். அவர் தங்க செங்கலை பார்த்ததும் சிறிது எடுத்துச் சென்று விட்டார். நீங்கள் சாட்சாத்காரத்தில் சொர்க்கத்தின் தங்க, வைர மாளிகையைப் பார்க்கின்றீர்கள். தங்கக் களஞ்சியத்தைப் பார்க்கின்றீர்களெனில், சிறிது எடுத்துச் செல்ல வேண்டும் என்று நினைக்கின்றீர்கள். சூட்சும வதனத்தில் தங்கம் கிடைக்காது. தங்கம் வைகுண்டத்தில் இருக்கும். அங்கு களஞ்சியங்களுக்கு விமானத்தில் சென்று நாம் தங்கத்தை நிறைத்துக் கொண்டு வருவோம் என்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். பெரிய பெரிய தங்கக் கட்டிகளும் இருக்கும். இப்பொழுதும் கூட பெரிய பெரிய மனிதர்களிடத்தில் தங்கம் இருக்கின்ற தல்லவா! பாரதத்தில் தங்கம், வெள்ளி கண்டிப்பாக இருக்கும். அனைவரிடத்திலும் பெரிய பெரிய குகைகள் இருக்கும், அதனை யாரும் கொள்ளையடிக்க முடியாது. நெருப்பு பற்றி எரியாது. ஆக அவையனைத்தும் எதிர்காலத்தில் உங்களது கைகளில் வந்துவிடும். எந்த விமானத்தின் (விநாசத்திற்காக) மூலம் அணு குண்டுகளை வீசுகின்றார்களோ அதுவே பிறகு சுகத்திற்காக நிமித்தமாகி விடும். சத்யுகத்தில் இவையனைத்தும் இருந்தது, பிறகு மறைந்து விட்டது. இப்பொழுது மீண்டும் உருவாகும்.

களஞ்சியங்களுக்குச் சென்று எப்படி எடுத்து வருகின்றனர் என்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். களங்சியங்கள் அனைத்தும் புதிதாக ஆகிவிடும். இப்பொழுது பழையதாக இருக்கின்றன. ஆக அப்படிப்பட்ட அதிர்ஷ்டத்தை உருவாக்கும் தந்தையிடமிருந்து முழு அதிர்ஷ்டத்தையும் எடுத்துக் கொள்ள வேண்டும். இதில் தவறு செய்து விடக் கூடாது. தந்தை மற்றும் ஆஸ்தியை நினைவு செய்ய வேண்டும். ஒருவரிடத்தில் பற்று வையுங்கள் என்று தந்தை கூறுகின்றார். சொர்க்கத்தை நினைவு செய்யுங்கள். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய்க் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கங்கள். ஆன்மீகத் தந்தையின் ஆன்மீகக் குழந்தைகளுக்கு நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) தனது உயர்ந்த அதிர்ஷ்டத்தை உருவாக்குவதில் தவறுகள் செய்யக் கூடாது. நல்ல முறையில் ஸ்ரீமத்படி நடந்து படிப்பின் ஆதாரத்தில் உயர்ந்த அதிர்ஷ்டத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

2) பிரானேஷ்வர் தந்தையின் நினைவில் இருந்து அனைவருக்கும் உயிர் தானம் கொடுக்க வேண்டும். அனைவரின் உயிரையும் காப்பாற்ற வேண்டும். யாரையும் துக்கமானவர் களாக ஆக்கக் கூடாது.

வரதானம் : எஜமானத் தன்மை என்ற நிலையில் நிலைத்திருந்து, இயற்கை மூலமாக ஒத்துழைப்பு (சகயோகம்) என்ற மாலையை அணிந்துக் கொள்ளக் கூடிய இயற்கையை வென்றவர் (பிரகிருதி ஜீத்) ஆவீர்களாக.

இயற்கை தனது எஜமானர்களை இப்பொழுதிலிருந்தே அழைத்துக் கொண்டிருக்கிறது, நாலா புறங்களிலும் இயற்கையின் தத்துவங்கள் குழப்பம் விளைவிக்கும். ஆனால் எங்கு இயற்கை யின் எஜமானர்களாகிய நீங்கள் இருப்பீர்களோ, அங்கு இயற்கை அடிமையாகி சேவை செய்யும். நீங்கள் இயற்கையை வென்றவர்களாக ஆனால் மட்டும் போதும். பின் இயற்கை ஒத்துழைப் பின் மாலையை அணிவிக்கும். எங்கு இயற்கையை வென்ற பிராமணர்களாகிய உங்கள் பாதம் இருக்குமோ, இடம் இருக்குமோ, அங்கு எந்தவொரு நஷ்டமும் ஏற்பட முடியாது. புயல்கள் வரும், பூமி ஆடும் ஆனால் வெளியில் ஈட்டி போல இருக்கும். மேலும் இங்கு ஊசி அளவு தான் இருக்கும். எல்லாருமே ஸ்தூலத்திலும் சூட்சுமத்திலும் ஆதாரம் பெறுவதற்காக உங்கள் பக்கம் ஓடி வருவார்கள்.

சுலோகன்: அலௌகீக சுகம் அல்லது மனதின் சுவையை அனுபவம் செய்ய வேண்டும் என்றால் மன்மனாபவ என்ற நிலையில் நிலைத்திருங்கள்.

.